## சஜ்தாவில் ஓதவேண்டிய துஆ

1 سُبْحَانَ رَبِّيَ الأَعْلَى

பொருள்: என்னுடைய இரட்சகன் பரிசுத்தமானவன், மிக்க உயர்வான வன் (அபூ தாவூத், திர்மிதி) என்று மூன்று முறை சொல்லவேண்டும்.

2 سُبْحَانَكَ أَللّٰهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ أَللّٰهُمَّ اغْفِرْ لِي

பொருள்: எங்கள் இறைவனே, நீ பரிசுத்தமானவன், புகழ் அனைத்தும் உனக்கே உரியது, எங்கள் இறைவனே, என்னை மன்னித்தருள்வாயாக. (புக்ஹாரி, முஸ்லிம்)

3 سُبُّوح ،قُدُّوس، رَبُّ الْمَلاَئِكَةِ وَالرُّوحِ

பொருள்: பரிசுத்தமானவனே, புனிதமானவனே, வானவர்கள் மற்றும் ரூஹுகளின் இரட்சகனே (முஸ்லிம்)

4 أَللّٰهُمَّ لَكَ سَجَدْتُ، وَبِكَ آمَنْتُ، وَلَكَ أَسْلَمْتُ، سَجَدَ وَجْهِي لِلَّذِي خَلَقَهُ، وَصَوَّرَهُ، وَشَقَّ سَمْعَه وَبَصَرَهُ، تَبَارَكَ اللهُ أَحْسَنُ الْخَالِقِينَ

பொருள்: எங்கள் இறைவனே, நான் உனக்காகவே சிரம்பணிகின்றேன், உன்னைக்கொண்டே விசுவாசம் கொண்டுள்ளேன், உனக்கே அடிபணிகிறேன், என்னுடைய முகம் அதனைப் படைத்தவனுக்காகவும் வடிவமைத்தவனுக்காகவும், செவியும் பார்வையும் அளித்தவனுக்காகவும் சிரம் பணிந்தது, மிக்க அருளாளனான அல்லாஹ், சிறப்பு மிக்க படைப்பாளனாவான் (முஸ்லிம்)

5 سُبْحَانَ ذِي الْجَبَرُوتِ وَالْمَلَكُوتِ وَالْكِبْرِيَاءِ وَالْعَظَمَةِ

பொருள்: பரிசுத்தமானவனே, சர்வ வல்லமையுடையோனே, ஆட்சியதிகாரம் மற்றும் பெருமையும் மேன்மையும் மிக்கவனே (அபூ தாவூத்)

6 أَللّٰهُمَّ اغْفِرْ لِي ذَنْبِي كُلَّه دِقَّهُ، وَجِلَّهُ، وَأَوَّلَه وَآخِرَه وَعَلاَنِيَتَه وَسِرَّه

பொருள்: எங்கள் இறைவனே, என்னுடைய பாவங்கள் அனைத்தையும் மன்னித்தருள்வாயாக, சிறியவையும் பெரியவையும், முன்பு செய்தவை, பின்பு செய்தவை, மறைவானவை மற்றும் வெளிப்படையானவை அனைத்தையும் மன்னித்தருள்வாயாக (முஸ்லிம்)

www.uzairfalahi.com

7 أَللّٰهُمَّ إِنِّي أَعُوذ بِرِضَاكَ مِنْ سَخَطِكَ، وَبِمُعَافَاتِكَ مِنْ عُقُوبَتِكَ، وَأَعُوذ بِكَ مِنْكَ لاَ أُحْصِي ثَنَاء عَلَيْكَ أَنْتَ كَمَا أَثْنَيْتَ عَلَى نَفْسِكَ

*பொருள்: எங்கள் இறைவனே, நான் உன்னுடைய திருப்பொருத் தத்தைக்கொண்டு, உன்னுடைய கோபத்திலிருந்து பாதுகாப்பு தேடுகி றேன், உன்னுடைய மன்னிக்கும் பண்பைக்கொண்டு உன்னுடைய தண் டனைகளிலிருந்து பாதுகாப்புத் தேடுகின்றேன், உன்னைக்கொண்டு உன்னுடைய வெறுப்பிலிருந்தும் பாதுகாப்புத்தேடுகிறேன், நான் உன்னை எவ்வாறு துதித்துப் புகழவேண்டுமோ அவ்வாறு என்னால் செய்ய இயலவில்லை, நீயோ, உன்னையே புகழ்ந்து கூறியுள்ளது போன்றே புகழுக்குரியவனாவாய். (முஸ்லிம்).*

* * *

www.uzairfalahi.com